


கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (20.2.2026) சென்னை, நந்தனத்தில், கழக தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள் மற்றும் சமூக வளைத்தள தன்னார்வலர்கள் சந்திப்பு நிகழ்ச்சியில், "ஆடுகளம் ஒரே தலைவன்" என்ற செயலியை வெளியிட்டார். இந்நிகழ்ச்சியில், அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், முனைவர் டி.ஆர்.பி.ராஜா, சட்டமன்ற உறுப்பினர் த.வேலு, கழக செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் தலைவர் துறைமுகம் காஜா, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் தலைவர் பூச்சி முருகன், கழகத் தகவல் தொழில்நுட்ப அணி இணைச் செயலாளர் மகேந்திரன், தகவல் தொழில்நுட்ப அணி ஆலோசகர்கள் கவிஞர் மனுஷ்யபுத்திரன் மற்றும் லெனின், , மணிகண்டன், சூர்யா கிருஷ்ணமூர்த்தி மற்றும் ஹபிசுல்லா, செல்வி மதிவதனி, செந்தில் வேல் தலைமைக் கழக நிர்வாகிகள் தகவல் தொழில்நுட்ப அணியின் நிர்வாகிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.




கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு நேற்று முன்தினம் (20.2.2026) சென்னை, நந்தனத்தில், கழக தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள் மற்றும் சமூக வலைத்தள தன்னார்வலர்கள் சந்திப்பு நிகழ்ச்சியில், கழகத் தகவல் தொழில்நுட்ப அணிச் செயலாளர் தொழில் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா உள்ளிட்ட கழக தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள் நினைவுப் பரிசு வழங்கினார்கள்.

## நாளை (பிப்ரவரி 23) முதல் மார்ச் 8 வரை

# ‘வெல்லும் தமிழ்ப் பெண்கள் - வீடு வீடாகப் பரப்புரை’

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அறிக்கை!

2026 ஜனவரி 13 அன்று சென்னை, அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கத்தில் நடைபெற்ற “தி.மு.க. மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் **‘வெல்லும் தமிழ்ப் பெண்கள் வீடு வீடாகப் பரப்புரை’** நடத்திட வேண்டுமென தீர்மானிக்கப்பட்டது.

‘திராவிட மாடல்’ அரசு அமைந்த பிறகு பெண்களுக்கான **‘கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்’ - ‘விடியல் பயணம்’ - ‘தோழி விடுதிகள்’ - ‘புதுமை பெண் திட்டம்’** உள்ளிட்ட பல்வேறு நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு, மகளிருக்கான ஆட்சியென நடைபெற்று வருகிறது. நமது சாதனைத் திட்டங்களால் பெண்கள் வெல்லும் தமிழ்ப் பெண்களாக உயர்ந்துள்ளனர். பெண்கள் பயனாளிகள் மட்டுமல்ல, மாநில வளர்ச்சியின் பங்குதாரர்கள் என்ற சீரிய சிந்தனையுடன் செயலாற்றும் ‘திராவிட மாடல் அரசு’ நிறைவேற்றியுள்ள நலத் திட்டங்களையும் - ‘பெண்களின் முன்னேற்றமே தமிழ்ச் சமூகத்தின் முன்னேற்றம்’ எனும் கொள்கை உறுதியுடன் பெண்களுக்கான எண்ணற்ற பல திட்டங்களையும் - சாதனைகளையும் ஒவ்வொரு வீட்டிலும் உள்ள மகளிரிடம் எடுத்து சென்று சேர்ப்பதே இப்பரப்புரையின் நோக்கமாக இருக்க வேண்டும்.

இப்பரப்புரையை, வீடு வீடாகச் சென்று மேற்கொள்ளும் விதமாக தி.மு. கழகத்தின் சார்பில் ஒவ்வொரு வாக்குச் சாவடியிலும் மாவட்டச் செயலாளர்களால் வழங்கப்பட்டுள்ள பட்டியலின் அடிப்படையில், 10 மகளிரை கொண்ட குழு உருவாக்கப்பட்டுள்ளது. அக்குழுவின் சார்பில் ஒரு உறுப்பினர் வீதம் தேர்வு செய்யப்பட்டு தொகுதி அளவிலான பயிற்சிக் கூட்டங்களை நடத்திட வேண்டும். “வெல்லும் தமிழ்ப் பெண்கள்” பரப்புரைக்கான சட்டமன்றத் தொகுதி வாரியான பயிற்சிக் கூட்டத்தை வரும் பிப்ரவரி 20, 21 மற்றும் 22-ஆம் தேதிகளுக்குள் அனைத்து தொகுதிகளிலும் நடத்தி முடித்திட வேண்டும்.

இப்பயிற்சியை, சட்டமன்றத் தொகுதி மகளிர் அணி பொறுப்பாளர்கள் வழங்குவர். பயிற்சிக் கூட்டத்தில் வெல்லும் தமிழ்ப் பெண்கள் பரப்புரை பற்றிய முழு பயிற்சியும் வாக்குச்சாவடி அளவிலான மகளிர் குழு பொறுப்பாளர்களுக்கு அளிக்கப்படும். அதன் பிறகு அவர்கள் ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் உள்ள இதர உறுப்பினர்களுக்கு பயிற்சி அளித்து பரப்புரையைத் தொடங்கிட வேண்டும்.

தேர்தலை காரணமாக வைத்து, கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தையே முடக்குவதற்கான ஒன்றிய பா.ஜ.க. - அடிமை அ.தி.மு.க.வின் சூழ்ச்சிகளை முறியடித்து, “ நீ ஆயிரம் ரூபாயை நிறுத்த முயற்சித்தால், நான் என் மக்களுக்கு ரூபாய் ஐந்தாயிரமாக தருவேன்” என சூளுரைத்து பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் ஆகிய மூன்று மாதங்களுக்கான தொகையினை முன்பணமாக ரூ.3000/, கோடைக் கால சிறப்புத் தொகுப்பு ரூ.2,000/ என மொத்தம் ரூ.5000/த்தினை தமிழ்நாட்டு பெண்களுக்கு வழங்கிய திராவிட மாடல் அரசின் சாதனைகளையும் வீடு வீடாக எடுத்துச் சொல்ல வேண்டும். அதுமட்டுமின்றி, ‘திராவிடமாடல் 2.0’ ஆட்சியில் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை மாதம் ரூ.2,000/மாக உயர்த்தி வழங்கப்படும் என்ற எனது உறுதிமொழியையும், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை தடையின்றி தொடர, கழக ஆட்சி தொடர்வது அவசியம் என்பதையும் மகளிர்க்கு உணர்த்திட வேண்டும்.

**நாளை (பிப்ரவரி 23) முதல் “வெல்லும் தமிழ்பெண்கள் - வீடு வீடாகப் பரப்புரை”** தொடங்கி, உலக மகளிர் தினமான மார்ச் 8-ஆம் தேதிக்குள் அனைத்து வீடுகளையும் சென்றடையும் வகையில் சிறப்பாக நடத்திட வேண்டும்.

கழகத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க கழகத்தின் வெற்றியை உறுதி செய்து மீண்டும் தி.மு.கழகத்தை ஆட்சிக் கட்டிலில் அமர்த்திட புறப்பட்டுவிட்டது இந்த ஸ்டாலினின் மகளிர் படை என இப்பரப்புரை சிறப்புடன் அமைந்திட வேண்டும்.

வெல்லும் தமிழ்ப் பெண்கள் பரப்புரைக்கான அனைத்து ஏற்பாடுகளையும் மண்டல பொறுப்பாளர்கள் -பொறுப்பு அமைச்சர்கள் - மாவட்டக் கழகச் செயலாளர்/பொறுப்பாளர்கள் செய்துதர வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

**மு.க.ஸ்டாலின்**
தலைவர்,
தி.மு.க.

**அண்ணா அறிவாலயம்**
சென்னை - 18

## இன்று (22.2.2026 – ஞாயிற்றுக்கிழமை), கோவை, கருமத்தம்பட்டி, கணியூர் டோல்கேட் அருகில்

# கழக இளைஞர் அணிச் செயலாளர் - துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் தி.மு.க. இளைஞர் அணி மேற்கு மண்டல நிர்வாகிகள் சந்திப்பு!

## தலைமைக் கழகம் அறிவிப்பு!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின்** அவர்கள் உத்தரவின்பேரில், தலைமைக் கழக அனுமதியுடன் கழக இளைஞர் அணிக்கு தமிழ்நாடு முழுவதும் உள்ள அனைத்து கிளை - வார்டு - பாகங்களில் நிர்வாகிகள் நியமிக்கப்பட்டு வருகின்றனர்.

அந்த வகையில், வடக்கு மண்டலத்துக்கு உட்பட்ட 28 மாவட்டங்கள் - 91 சட்டமன்றத் தொகுதிகளைச் சேர்ந்த 1,50,000 நிர்வாகிகளை திருவண்ணாமலையிலும் -

தென் மண்டலத்துக்கு உட்பட்ட 20 கழக மாவட்டங்கள் - 58 சட்டமன்ற தொகுதிகளைச் சேர்ந்த 1,00,000 நிர்வாகிகளை விருதுநகரிலும் சந்தித்து, தமிழ்நாடு முதலமைச்சர் **கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின்** அவர்கள் சிறப்புரையாற்றினார்.

இதைத் தொடர்ந்து கழக இளைஞர் அணிச் செயலாளரும், துணை முதலமைச்சருமான **உதயநிதி ஸ்டாலின்** அவர்கள் தலைமையில்;

கழகத் துணைப் பொதுச்செயலாளர்கள் ஆ.இராசா எம்.பி., அந்தியூர் ப.செல்வராஜ் எம்.பி., அமைச்சர் மு.பெ.சாமிநாதன் ஆகியோர் முன்னிலையில், கரூர் மாவட்டக் கழகச் செயலாளர் வி.செந்தில்பாலாஜி அவர்கள் வரவேற்புரையாற்றிட; , மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர்கள் எஸ்.ஜோயல், இன்பா ஏ.என்.ரகு, நா.இளையராஜா தலைவர் - தாட்கோ, ப.அப்துல்மாலிக், பிரபு கஜேந்திரன், பி.எஸ்.சீனிவாசன், ஜி.பி.ராஜா, சி.ஆனந்தகுமார் ஆகியோர் கலந்து கொள்ள;

இன்று (**22.02.2026-**ஞாயிற்றுக்கிழமை), மாலை 3.00 மணி அளவில், **கோவை, கருமத்தம்பட்டி, கணியூர் டோல்கேட் அருகில் “மேற்கு மண்டல தி.மு.க. இளைஞர் அணி நிர்வாகிகள் சந்திப்பு”** நடைபெற உள்ளது.

இதில், மேற்குமண்டலத்தைச் சேர்ந்த கழக மாவட்டத்திற்குட்பட்ட மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்டம், கிளை மற்றும் வாக்குச்சாவடி அளவிலான இளைஞர் அணி நிர்வாகிகள் வெண்சீருடை அணிந்து வரலாறு படைத்திட, அந்தந்த மாவட்டக் கழகச் செயலாளர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் ஒருங்கிணைந்து இளைஞர் அணி நிர்வாகிகளை “மேற்குமண்டல நிர்வாகிகள் சந்திப்பிற்கு” அழைத்து வரும் பொறுப்பினை மேற்கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

வரலாறு படைக்கப் போகும் இந்த “தி.மு.க. இளைஞர் அணி மேற்குமண்டல நிர்வாகிகள் சந்திப்பில்” மாண்புமிகு அமைச்சர் பெருமக்களான சு.முத்துசாமி, அர.சக்கரபாணி, டாக்டர் மா.மதிவேந்தன், திருமதி என்.கயல்விழி செல்வராஜ்;

மாவட்டச்செயலாளர்கள்/பொறுப்பாளர்களான தளபதி முருகேசன், தொ.அ.ரவி, மேயர் என்.தினேஷ்குமார், க.செல்வராஜ், எம்.எல்..ஏ., இல.பத்மநாபன், கே.ஈஸ்வரசாமி, எம்.பி., என்.நல்லசிவம், கே.ஆர்.என். இராஜேஷ்குமார்,எம்.பி., கே.எம்.ராஜு, தோப்பு வெங்கடாசலம், கே.எஸ்.மூர்த்தி, துரை. செந்தமிழ்செல்வன்;

மாநகரச் செயலாளர்களான மு.சுப்பிரமணியம், டி.கே.டி.மு.நாகராசன், ஈ.தங்கராஜ், எஸ்.பி.கனகராஜ்,

நாடாளுமன்ற - சட்டமன்ற உறுப்பினர்களான கணபதிராஜ் குமார், எம்.பி., கே.ராமச்சந்திரன், எம்.எல்.ஏ., வி.சி.சந்திர குமார், எம்.எல்.ஏ., ஏ.ஜி.வெங்கடாசலம் எம்.எல்.ஏ., ரா.இளங்கோ, எம்.எல்.ஏ., பி.ராமலிங்கம், எம்.எல்.ஏ., திருமதி கே.சிவகாமசுந்தரி, எம்.எல்.ஏ, ஆர்.மாணிக்கம், எம்.எல்.ஏ.,

மேற்குமண்டல இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர்களான சபரிகார்த்திகேயன், எம்.ஏ.ஆர்.கே. ஹக்கீம், இரா.தனபால், மு.ஜெயக்குமார், ஜெ.திருவாசகம், ஏ.திருவேங்கடம், சன் சுரேஷ், சி.விஸ்வநாத், ஆர்.பாலாஜி, வெங்கமேடு சக்திவேல், இமயம் சசிக்குமார்,

மாநகர அமைப்பாளர்களான எம்.எஸ்.ஆர்.ராஜு, முத்துக்குமார், கே.டி.சேந்தபுகழன், கராத்தேபூபதி ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

கழக இளைஞர் அணி துணைச் செயலாளர் கே.இ.பிரகாஷ் அவர்கள் நன்றியுரையாற்றுகிறார்.

**அண்ணா அறிவாலயம்**
சென்னை - 600 018.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

